
# வான் கொண்ட ஆளுமை முரசொலி மாறன்!



**1 பாய்மரமும் தொடுவானமும்**

உலக வர்த்தக அமைப்பின் (WTO) நான்காவது அமைச்சரவை மாநாடு, 2001ல்

தோஹா நகரின் உறக்கமற்ற அரங்கில், அதிகாரத்தின் இரைச்சல் செவிகளை அடைத்தது. குளிர்ந்த நீல ஒளியின் கீழ், 'பச்சை அறைக்குள்' (closed door negotiations) உலகின் தலைவிதி எழுதப்பட்டுக்கொண்டிருந்தது. சிறிய தேசங்களின் மௌனம், சோர்விலும் நிராசையிலும் கரைந்துகொண்டிருந்தது. அந்த இரைச்சலுக்கு மத்தியில், ஒரு நிதானமான ஒலி எழுந்தது அசைக்க முடியாத, ஒரு இனமான தமிழ்க்குரல்.

அது, வர்த்தகத்தின் விலை பற்றிப் பேசவில்லை; தன்மானத்தின் விலைமதிப்பற்ற தன்மையை நிறுவியது. அந்த நொடி, சுயமரியாதை ஒரு தேசத்தின் வெளியுறவுக் கொள்கையாக உருமாறிய தருணம். முரசொலி மாறன் பேசியபோது, அது, ஒரே மனிதனின் குரலாக ஒலிக்கவில்லை; அது, திராவிட இயக்கத்தின் மனசாட்சியாகவே ஒலித்தது.

அவருக்கு, கொள்கை என்பது நிர்வாகம் சார்ந்தது மட்டும் அல்ல - அது அறத்தின் செயல்வடிவம். அதனால்தான், 1999 ஆம் ஆண்டு, சியாட்டிலில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பின் மாநாட்டுக் புறப்படும் முன், தொழிற்சங்கங்களையும், தொழில் அதிபர்களையும், எதிர்க்கட்சிகளையும் ஒரே அறைக்குள் அழைத்தார். அங்கே, அவர், "தேசிய ஓர்மை" எனும் கவசத்தை வார்த்தெடுத்தார். இதுதான் திராவிட இயக்கம் கற்றுக்கொடுத்த பாடம். அதிகாரம் என்பது இணக்கத்திலிருந்து பிறக்கிறது; உத்தரவிலிருந்து அல்ல.

சியாட்டிலில், அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் "தொழிலாளர் நலன் சார்ந்த பாதுகாப்புகள் சர்வதேச தொழிலாளர் தரநிலைகளோடு (International Labour Standards) குறைவாகக் கொண்ட நாடுகளுக்கு வர்த்தகரீதியிலான தடைகள் (Trade Sanctions) இருக்கும்" என்றபோது, வளரும் நாடுகள் அதிர்ந்து நின்றன. ஆனால் மாறன், "இந்தியாவின் ஒப்புமை தெளிவாக உள்ளது - நாம் நியாயமில்லாத விதிகளுக்குக் கையெழுத்திடமாட்டோம்" என்று ஆணித்தரமாக முழங்கினார். அது 'சத்தமில்லாத தலைமை' (Silent Leadership) என்பதன் வரையறையாகக் கொண்டாடப்பட்டது.

1999 சியாட்டில் கூட்டத்தைப் பற்றி பாராளுமன்றத்தில் பேசும்போது "இறுதி நாள் தள்ளிவைக்கப்பட்டது (We have postponed the DDay)" என்ற அவரது ஒற்றை வரி, தோல்வியின் விரக்தியல்ல அது போராட்டத்தைத் தள்ளிப்போட்ட ஒரு தளபதியின் தந்திரம். "உலக வர்த்தக அமைப்பு, ஒரு உலக அரசாங்கம் அல்ல; இறையாண்மை கொண்ட அரசுகள் நியாயம் பேசும் மேடை மட்டுமே," என்ற அவரது தெளிவு, அன்றையை உலகிற்குப் புதிதாய் ஒலித்தது, பத்திரிகைகளின் தலைப்பாகியது.

இந்தக் கட்டுரையின் மைய உருவகம் இதுதான்: தமிழ்த்துவம் ஒரு பாய்மரம். அது குருட்டுத்தனமாகத் துடுப்பு போடுவதில்லை; உலகக் காற்றை வாசித்து, அதன் திசையறிந்து, தனது பயணத்தை வகுக்கிறது. ஒரு தேர்ந்த மாலுமி, புயலில் பாய்மரத்தைச் சுருக்கி, நிதானத்தில் அதை விரித்து, சுக்கானை உறுதியாகப் பிடித்து, தனது வழியை வகுப்பதைப் போல மாறன் அந்தப் பயணத்தை வழிநடத்தினார்.

ஆனால் இன்று, நம்மைச் சுற்றும் காற்று மாறியுள்ளது. பாதுகாப்புவாதம் எனும் புயல் அடிக்கிறது; ஜனரஞ்சகத் தன்மையுடனான பெரும்பான்மை வாதம் (Populist Majoritarianism) எனும் சுழல் நம்மை இழுக்கிறது; தொழில்நுட்பம் எனும் பெருமழை நம் பார்வையை மறைக்கிறது. இந்தச் சூழலில், கடலின் சவால்களைவிட, கரையின் பாதுகாப்பு வசீகரமாகத் தோன்றுகிறது. அப்போது, திராவிட மரபு நம்மையே பார்த்துக் கேட்கும் கேள்வி இதுதான்:

"நாம் இன்னும் அந்த மாலுமிகளாகத்தான் இருக்கிறோமா? அல்லது கரையின் பாதுகாப்பில் நங்கூரமிட்டுவிட்டு, பழைய கடல் பயணக் கதைகளைப் பெருமையுடன் பேசிக்கொண்டிருக்கிறோமா?"

இந்த நினைவுப் பயணத்தின் நோக்கம், முரசொலி மாறனை ஒரு மாபெரும் அமைச்சராக நினைவுகூர்வது மட்டுமல்ல; அவர் நமக்குத் தந்த சிந்தனையை, நமது காலத்தின் சவால்களுக்கு வழிகாட்டும் ஒரு தத்துவமாக மீட்டெடுப்பதே. அவர் விட்டுச்சென்றது ஒரு பாடத்திட்டம் அல்ல; அது ஒரு சிந்தனை முறை - இது கூச்சலின் சமத்துவமல்ல; குரல்களின் சமத்துவம்.

அந்தச் சமத்துவத்தை உலக அரங்கில் நிலைநாட்டும் அறிவும், அதை நமது அமைப்புகளுக்குள் கொண்டுவரும் செயல்திறனும் இணைந்தால் மட்டுமே, நமது பாய்மரம் தொடுவானத்தைத் தொட முடியும். நம் கொடி உயரமாகப் பறக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், அந்தக் கொடியை ஏற்றிய கைகளுக்குள், காற்றை இசைக் கருவி போல் வாசிக்கும் துணிவும், நீதியின் திசையறியும் நிதானமும் இன்னும் உயிருடன் இருக்கிறதா என்பதே நம் காலத்தின் கேள்வி.

அந்த நிதானத்தையும் துணிவையும் மீண்டும் கண்டடைவதே - நம் அடுத்த பயணம்.

**2 காற்றை அறிந்த மாலுமி**

1990கள், உலகம் ஒரு புதிய நூற்றாண்டிற்குள் நுழைந்துகொண்டிருந்த காலம் அது. பழைய சித்தாந்தங்கள் சரிந்து, சந்தை ஒன்றே சித்தாந்தம் என்ற கோஷம் ஓங்கி ஒலித்த காலம். அந்தச் சூழலில், ஒரு நாட்டை வழிநடத்த, வெறும் நிர்வாகத் திறனோ, போர்க்குணமோ மட்டும் போதாது; நுட்பமான சிந்தனைத் தெளிவு தேவைப்பட்டது. முரசொலி மாறன், அந்தச் சிந்தனையாளராகவே திகழ்ந்தார்.

அவருக்கு, கொள்கை என்பது `நிர்வாகம்' என்ற உலர்வான சொல்லில் சிறைப்படாதது. அது அறத்தின் செயல் மொழி. அவருக்கு, ஒரு கோப்பில் இடப்படும் கையெழுத்தும் அதிகாரச் செயல் அல்ல; அது ஒரு தேசத்தின் தார்மீக நிலைப்பாட்டின் வெளிப்பாடு. சியாட்டில் முதல் தோஹா வரை (1999-2001), அவர் எடுத்த ஒவ்வொரு நிலைப்பாடும் புள்ளிவிவரங்களின் தொகுப்பல்ல; அது, தார்மீகத்தின் உரைகல். அவரது பயணங்களுக்கான திசைகாட்டியும், செயல்களுக்கான உயிர்நாடியும், அவர் பாங்காக்கில் உலகுக்கு வழங்கிய அந்த ஒற்றை வரியிலேயே அடங்கியுள்ளது:



எழுத்தாளர்
ஜெயன்நாதன்
கருணாநிதி

"சோஷலிசத்தின் முடிவு ஏழைகளின் அழுகுரலை மௌனப்படுத்தாது; வறுமையின் வலியிலிருந்து நீதிக்கான புதிய கனவுகள் பிறக்க வேண்டும் - ஒரு புதிய உலகப் பொருளாதார ஒழுங்கு பிறக்க வேண்டும். (The end of socialism does not silence the cry of the poor, and out of the pain of poverty must be born new dreams of justice a new world economic order)" United Nations Conference on Trade and Development (UNCTAD) X Conference, 2000.

இந்த தார்மீகத் தெளிவிலிருந்துதான் அவரது ராஜதந்திரத்தின் ஒவ்வொரு படியும் பிறந்தது.

அந்த வரிகள், வெறும் சொற்பொழிவிற்கான மேடை அலங்காரப் பேச்சல்ல. அது பின்னர், Doha Declaration on TRIPS and Public Health (2001)ல் ஒலித்தது -"அவசர காலத்தில், மனித உயிர் காப்புரிமையைவிட மேலானது" என்ற முழக்கத்தில்தான் எத்தனை நேற்றைய, இன்றைய, நாளைய அரசியலும் வரலாறும் பொதிந்துள்ளது.

**ஒப்புமையின் கவசம் (The Shield of Consensus)**

மாறன் ஒருபோதும் தனித்து யுத்தத்திற்குப் புறப்படவில்லை. போருக்குப் புறப்படும் முன், தன் படைகளை அணிவகுத்தார்; தன் கோட்டையைப் பலப்படுத்தினார். சியாட்டிலுக்குச் செல்லும் முன் அவர் செய்த முதல் வேலை அதுதான். தொழிற்சங்கங்கள், தொழில் அதிபர்கள், விவசாயச் சங்கங்கள், எதிர்க்கட்சிகள் - பிரிந்து நின்ற அத்தனை குரல்களையும் ஒரே அறைக்குள் அழைத்துவந்தார். அங்கே அவர், `தேசிய ஓர்மை' எனும் கவசத்தை வார்த்தெடுத்தார்.

அது வெறும் சம்பிரதாயச் சந்திப்பாக நிகழவில்லை; அது ஒரு தேசத்தின் மனசாட்சியை ஒன்றுதிரட்டிய நிகழ்வு. கூட்டாட்சித் தத்துவத்தையும், அனைவரையும் உள்ளடக்கிய பயணத்தையும் நம்பிய திராவிட இயக்கத்தின் கொள்கையை, அவர் தேசிய அரங்கில் செயல்படுத்திக் காட்டினார். அதனால்தான், உலக அதிகாரத்தின் அழுத்தங்களுக்கிடையே அவர் நிதானமாக நிற்க முடிந்தது.

"இது எனது தனிப்பட்ட நிலைப்பாடு அல்ல; இது எங்கள் தேசத்தின் ஒட்டுமொத்தக் குரல்," என்று அவர் கூற முடிந்தது.

அந்த ஒற்றுமைதான், WTO வட்டாரங்களில் `India spoke as India' என்ற மதிப்பை உருவாக்கியது.

இது ஒரு எளிய கேள்வியை நமக்குள் எழுப்புகிறது:

இன்று, நாம் உலகை எதிர்கொள்ளும் முன் நமக்குள்ளே இத்தனை ஆழமாக உரையாடுகிறோமா?

அல்லது பிளவுபட்ட குரல்களுடன் போர்க்களம் புகுந்து, எளிதில் பலியாகிவிடுகிறோமா?

**பகுத்தறிவின் ஆயுதம் (The Weapon of Reason)**

அவரது இரண்டாவது பலம், உணர்ச்சிவசப்பட்ட முழக்கங்கள் அல்ல - கூர்மையான பகுத்தறிவு. உலக வர்த்தக அமைப்பில், `வர்த்தகம் சாராத' தொழிலாளர் நலன் மற்றும் சுற்றுச்சூழல் விதிகள் என்ற பெயரில், வளர்ந்த நாடுகள் திணித்த கொள்கைகளை அவர் அரசியல் கோஷங்களால் எதிர்க்கவில்லை. அதன் உள்நோக்கத்தை அறிவுமூலம் அம்பலப்படுத்தினார். அதை அவர், `மறைமுகப் பாதுகாப்புவாதம்' (disguised protectionism) என தர்க்கத்துடன் நிறுவினார்.

அதிலும் முக்கியம் - அவர் தன் சொந்த வார்த்தைகளால் மட்டுமல்ல, மேற்குலகின் மதிப்புமிக்க பத்திரிகைகள் (Wall Street Journal, The Economist) மூலம் அவர்களின் இரட்டை வேடத்தைக் காட்டினார். "உங்கள் ஊடகங்களே உங்கள் இரட்டை வேடத்திற்கு சாட்சி சொல்கின்றன," என்ற வரியில், விவாதத்தின் தளமே மாறியது. அதிகார பலத்தின் மேடை, தர்க்கத்தின் மேடையாக மாறியது.

இது, பகுத்தறிவை ஆயுதமாக ஏந்தும் பெரியாரின் வழிமுறை - உலக அரங்கில் வென்ற நாள்.

நாம் இன்றும் அந்த அறிவுச் சக்தியுடன் வாதாடுகிறோமா? அல்லது எளிமையான கோஷங்களின் பின்னால் ஒளிந்து கொள்கிறோமா?

**யதார்த்தவாதத்தின் சிற்பி (The Architect of Pragmatism)**

மாறன், வெறும் வெளிப்போராளி அல்ல; உள்சீர்திருத்தத்தின் சிற்பி. 1998ல் அவர் கூறிய புகழ்பெற்ற வரி -

"எனது அமைச்சகத்திற்கே வலியற்ற மரணம் வேண்டும் (I would like to give a painless death to my own ministry)" அவரின் ஆழந்த நம்பிக்கை அரசாங்கத்தின் தலைமைப் பொறுப்பென்பது கட்டுப்படுத்துவதல்ல; ஒழுங்குபடுத்தி, ஒருங்கிணைக்க வேண்டியதே.

ஒருபக்கம், தடையற்ற போட்டியை ஆதரித்தார்; மறுபக்கம், "பாதுகாப்பின் பெயரில் நுகர்வோரைத் தண்டிக்க முடியாது" என்று எச்சரித்தார். இது, உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே ஒரு தார்மீகச் சமநிலையை உருவாக்கும் முயற்சி - நியாயமான சந்தைக்கான திராவிடப் பார்வையின் சாரம்.

அவர் வெறும் சந்தைப் பொருளாதாரத்தைப் பேசவில்லை. அதே யதார்த்தவாத பார்வைதான் அவரை ஷென்சென் (Shenzhen) நோக்கி ஈர்த்தது. அந்த நகரத்தின் விளக்கொளியில், அவர் ஒரு கட்டிடத்தைக் காணவில்லை; ஒரு தத்துவத்தைக் கண்டார்.

தாராளமயமாக்கல் (Liberalization) என்பது கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது மட்டுமல்ல; அது வாய்ப்புகளை எளிதாக்குவது - facilitation என்ற தத்துவம்தான் அது. அந்தக் கண்ணோட்டமே இந்தியாவில் EPZ (Export Processing Zone)ஐ SEZஆக மாற்றியது; License Raj என்ற பத்தாம் பசலித்தனமான அரசுக் கட்டுப்பாட்டு செயல்பட்டிலிருந்து சுய சான்றளிப்பு (Self Certification) எனும் தொழில் முனைவோர் மீதான நம்பிக்கை அடிப்படையிலான செயல்பாடு நோக்கி நம்மைக் கொண்டுசென்றது.

**மூன்றுஅடி வழிமுறை**

சுருக்கமாகச் சொன்னால், மாறனின் வழிமுறை ஒரு மூன்று அடிப் பயணம்:

★ உள்நாட்டில் ஒப்புமை (Consensus) கட்டி நாட்டின் மனச்சாட்சியை ஒருங்கிணைத்தல்;

★ உலக அரங்கில் நாட்டின் தர்க்கபூர்வமான தெளிவை (Clarity) நிறுவுதல்;

★ அதன் அடிப்படையில் அறம் சார்ந்த துணிவை (Courage) வெளிக்காட்டுதல்.

இந்த மூன்றின் கலவையில்தான் ஒரு நாட்டின் குரல், வெறும் கூச்சலாக அல்லாமல் - மாற்றத்திற்கான சக்தியாக ஒலிக்கிறது.

அந்த மாலுமி, கொந்தளிப்பான உலகக் கடலில், இந்த வழிமுறையைக் கொண்டே தனது பாய்மரத்தைச் செலுத்தினார் - ஆரவாரமின்றி, ஆனால் ஆழமான நம்பிக்கையுடன்.

**3 முக்கோண இசைவு: கட்டுடை, காத்திடு, அளித்திடு**

சியாட்டில் மற்றும் தோஹாவின் உலக அரங்குகளில் அவர் அறத்தைப் பற்றிப் பேசினார்; அந்த அறத்தை, இந்தியாவின் உள் நிர்வாகக் கட்டமைப்பிலும் அவர் செயலால் மொழிபெயர்த்தார். அவருக்கு, சீர்திருத்தம் என்பது காகிதத்தில் வரையப்படும் ஒரு கோடு அல்ல; அது அறம் சார்ந்த ஒரு அரசியல் பொருளாதாரச் செயல்பாடு. பெரியார் தந்த கேள்வித் தெளிவையும், அண்ணா காட்டிய நடைமுறைத் திறனையும், கலைஞர் ஊட்டிய நிதானத்தையும் ஒரே புள்ளியில் இணைத்ததே மாறனின் சீர்திருத்தப் பாணி. அந்த இசைவை, "கட்டுடை, காத்திடு, அளித்திடு" என்று நாம் புரிந்துக்கொள்ளலாம். இது, வெறும் கொள்கை வடிவம் அல்ல; அது ஒரு நெறிமுறைச் சமநிலை - ஆட்சியின் ஒவ்வொரு அசைவும் நீதியின் தாளத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்ற அறிவுறுத்தல். திராவிட இயக்கத்தின் பேசப்படாத ஒரு பொருளாதார சிந்தனையாக இதை நான் கருதுகிறேன்.

**கட்டுடை (Deconstruct): கட்டுப்பாட்டிலிருந்து ஒருங்கிணைப்புக்கு**

1998ல் அவர் உதிர்த்த ஒரு வரி, இன்றுவரை உண்மையான சீர்திருத்தத்தின் மந்திரமாக ஒலிக்கிறது: "என் அமைச்சகத்திற்கே நான் வலியற்ற மரணம் தர விரும்புகிறேன்."

அது, அரசின் அமைப்பைக் கலைப்பதற்கான குரல் அல்ல; அரசின் ஆன்மாவை மாற்றியமைப்பதற்கான பிரகடனம். அதன் ஆழமான பொருள்: அரசு, அனைத்தையும் தன் கையில் வைத்திருக்கும் `கட்டுப்படுத்தும் கரம்' அல்ல; அனைவரையும் இணைத்து, அவர்களுக்கான வழியை எளிதாக்கும் 'ஒருங்கிணைக்கும் கரம் (Arm of coordination and facilitation)'. இதுதான் திராவிட இயக்கம் கண்ட கூட்டாட்சியின் நவீன வடிவம். அதனால்தான், அவர் உறுதியாக நம்பினார்: `உரிம ராஜ்ஜியத்தை (Licence Raj) ஒழிப்பது மட்டும் சுதந்திரமல்ல; அர்த்தமுள்ள, நியாயமான வழிகாட்டுதலே உண்மையான சுதந்திரம்.'

அதே காலகட்டத்தில், அந்நிய நேரடி முதலீட்டுக்கான (FDI) உச்சவரம்புகளை இந்தியா தளர்த்தியபோது, மாறனின் நோக்கம் தெளிவாக இருந்தது: திறந்த வாசல்கள் வேண்டும். ஆனால், நியாயமான பாதுகாப்பு வலைகளும் வேண்டும்.

அவர் பார்வையில், `பொருளாதாரச் சுதந்திரம் என்பது ஒரு தார்மீகக் கோட்பாடு. அதன் உச்சக்கட்ட வெற்றி எதுவென்றால் தான் ஆளும் துறை தேவையற்றதாய் மாறும்போதுதான், தான் ஒரு தலைவனாக வெற்றி பெற்றவன் என்பதே.'

காத்திடு (Defend): நியாயமான போட்டி என்பதே நுகர்வோரின் உரிமை

'பாதுகாப்பு' என்ற சொல்லை, வெறும் அரசியல் முழக்கமாக மாறன் ஒருபோதும் பயன்படுத்தவில்லை. அவருக்கு, அது சந்தையின் தார்மீகத்தைக் காக்கும் ஒரு காவல் கோபுரம். உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பது அவசியம். ஆனால், அந்தக் பாதுகாப்பு, ஒரு சிலரின் லாபத்திற்காக, ஒட்டுமொத்த மக்களின் உரிமைகளைப் பறிக்கக் கூடாது. 1998ல் அவர் கூறியது, இந்தச் சமநிலையின் இலக்கணம்: "Protectionism is one of the key rules in the game of free market forces. But in the name of protectionism, we cannot penalise the common consumer who has a right to a quality product at the right price dictated by supplydemand logic and not by any cartel. While we promise adequate anti dumping and countervailing duties to ensure the level playing field, it shouldn't be taken to the absurd extent of denying consumers good products."

இந்த வரிகளின் வழி, அவர் ஒரு ஆழமான எச்சரிக்கையை விடுத்தார்: பொருளாதாரம், நீதியின் வரம்புகளை மீறி வளருமானால், அது நுகர்வோரின் கிளர்ச்சிக்கு வழி வகுக்கும். அவர் வலியுறுத்தியது இதுதான்: உள்நாட்டு உற்பத்தியாளரைப் பாதுகாப்பது நமது கடமை; ஆனால், நியாயமான விலையில், தரமான பொருளைப் பெறுவது நுகர்வோரின் உரிமை. இரண்டுக்கும் இடையே ஒரு சமரசப் புள்ளியைக் கண்டடைவதே, மனிதத்துடன் இயங்கும் பொருளாதாரம் - மனிதநேயத்துடன் இயங்கும் ஒரு சந்தை.

தொடர்ச்சி நாளை...

---

## நெல்லையில் - 72 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

# ரூ.101.71 கோடி மதிப்பில் - 12170 உறுப்பினர்களுக்கு கடனுதவிகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினர்!

நெல்லை. நவ.23–

நெல்லையில் 72 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு,கூட்டுறவுதுறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ரூபாய் 101.71 கோடி மதிப்பில் 12,170 உறுப்பினர்களுக்கு பல்வேறு கடனுதவிகளை வழங்கினர்.

நெல்லையில் 72 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா மாநில அளவிலான விழா (20.11.2025) அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் தலைமையில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் க.நந்தகுமார், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் மு.வீரப்பன்,நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராபர்ட் புரூஸ், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வஹாப், நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் முனைவர்.க.சொ. இரவிச்சந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் மு.துரை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தொடர்ந்து முதலமைச்சர் அவர்களின் சிறப்பு திட்டமான தாயுமானவர் திட்டம், முதல்வர் மருந்தகம் உள்ளிட்ட பல்வேறு அரங்குகளை திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.

**பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேச்சு!**

இந்நிகழ்வில் சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கூட்டுறவுத் துறையை கொண்டு வந்தார்கள்.தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி கூட்டுறவுத் துறை அமைச்சர் கூட்டுறவுத் துறையை மிக சிறப்பாக வழி நடத்தி வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் பரிசுகளை அனைத்து குடும்ப அட்டைதாரர் களுக்கும் விடுபடாமல் வழங்கி கூட்டுறவுத் துறை பணியாளர்கள் தங்களது பணிகளை மிகச் சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். இந்தியாவிலே தமிழ்நாட்டில் தான் பொது விநியோகத் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறையில் பணியாற்றும் பணியாளர்கள் மிக சிறப்பாக பணியாற்றியதன் மூலம் ஒன்றிய அரசே பாராட்டும் வகையில் கூட்டுறவுத்துறை சிறப்பாக இயங்கி வருகிறது.

கூட்டுறவுத்துறை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் தள்ளுபடி செய்துள்ளது. தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறையில் பணியாளர்களின் உழைப்பின் காரணமாக தமிழ்நாட்டில் 70 ஆயிரம் கோடி டெபாசிட் வைத்துள்ளது. இந்தியாவிலே தமிழ்நாட்டில் தான் ரூ.20 ஆயிரம் கோடி பயிர்கடன் விவசாயி களுக்கு வட்டி இல்லாமல் கொடுத்துள்ளது.கூட்டுறவு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் கூட்டுறவுத்துறை பணியாளர்களுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

**அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!**

இவ்விழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்ததாவது.

72ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா மாநில அளவிலான விழா இன்று திருநெல்வேலி மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.பல நூற்றாண்டு காலத்திற்கு முன்பே தோன்றிய தமிழர்களுடைய கலாச்சாரம், பண்பாடு,நாகரிகம்,பண்மையும், தொண்மையும் கொண்டது போல கூட்டுறவு நீண்ட நெடிய வரலாறு கொண்டது.

இந்தியாவில் தமிழ்நாட்டில் தான் முதலாவதாக கூட்டுறவு தொடங்கப்பட்டது. குறிப்பாக,திருவள்ளூர் மாவட்டத்தில் திரூர் என்ற கிராமத்தில் 1904 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அமைப்பு தான் கூட்டுறவு சங்கங்கள்.125 ஆண்டுகளை எட்டிப்பிடித்த வரலாறு படைத்ததோடு,கூட்டுறவே நாட்டுயர்வு,கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பதை மெய்ப்பிக்கும் வகையில் கூட்டுறவுத் துறை 30க்கும் மேற்பட்ட செயல்பாடுகளுடன் சிறப்பாக இயங்கி கொண்டிருக்கிறது.

கிராமங்கள் முதல் நகரங்கள் வரை மக்களின் பொருளாதார தேவையை பூர்த்தி செய்கின்ற துறையாக கூட்டுறவுத்துறை விளங்கி வருகிறது.

குறிப்பாக எல்லா வகையான தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கும், அவர்களுக்கான முதலீடுகளுக்கான நிதியுதவி தேவை,அதற்காக மிக குறைந்த வட்டியிலும்,சில காலக்கட்டத்தில் வட்டியில்லாத கடனுதவி வழங்கியுள்ளது.

கூட்டுறவில் பணிபுரிவதற்கு பட்டப்படிப்புடன்,பட்டயப்படிப்பு அவசியம்.அதனை கற்பிப்பதற்காக 24 கூட்டுறவு பட்டய படிப்புகள் சார்ந்த நிறுவனங்கள் செயல்பட்டு கொண்டிருக்கிறது. படித்து வரும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தருகின்ற துறையாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்பு 17 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தி உள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தின் தான் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு விவசாயிகள் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு கட்டணமில்லா திட்டத்தினை கொண்டு வந்தார்கள்.1996ஆம் ஆண்டு கூட்டுறவு சங்கங்களில் ரூ.7000 கோடி விவசாய கடனுதவி களை தள்ளுபடி செய்தார்கள்.முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு கொரோனா போன்ற பேரிடர் காலக் கட்டத்தில் பொதுமக்களுக்கு வீடுதேடி சென்று காய்கறிகள், மளிகைப்பொருட்கள் கூட்டுற வுத் துறையின் மூலம் வழங்கப்பட்டு ள்ளது.5 பவுன் அதற்கு கீழ் அடகு வைத்த விவசாயிகளுக்கு ரூ.5225 கோடி கடனுதவி தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது.ரூ.2500 கோடி மகளிர் சுய உதவிக் குழு கடனுதவி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. கூட்டுறவுத்துறையின் மூலம் குறுகிய காலத்தில் விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழுக்கள், தொழில் முனைவோர்களுக்கு தேவையான கடனுதவிகள் வழங்கியுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி தேசிய அளவில் ஒன்றிய சார்பில் எடுக்கப்பட்ட தரவில் கூட்டுறவுத்துறை 5 பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டதற்காக பாரத பிரதமர் மூலம் பாராட்டி விருது மற்றும் கேடயம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திலும்,தனிநபரின் வளர்ச்சியிலும் கூட்டுறவுத்துறை என்பது இன்றியமையாத துறையாக செயல்பட்டு வருகிறது.மாவட்ட மற்றும் மாநில அளவிலான சிறந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

தொடர்ந்து 6 மகளிர் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு மின்சாரத்தில் இயங்கும் ஆட்டோக்களை சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் வழங்கினர்.

மேலும்,ரூபாய் 65.73 கோடி மதிப்பில் 7548 உறுப்பினர்களுக்கு பயிர் கடனுதவிகளும்,ரூ.25.56 கோடி மதிப்பில் 2676 உறுப்பினர்களுக்கு சுய உதவிகுழுக்கடனுதவிகளும், ரூ.2.42 கோடி மதிப்பில் 326 உறுப்பினர்களுக்கு பிற்படுத்தப் பட்டோர் தனிநபர் மற்றும் குழுக் கடனுதவிகளும்,ரூ.1.05 கோடி மதிப்பில் 112 உறுப்பினர்களுக்கு சிறுபான்மையினர் தனிநபர் மற்றும் குழுக்கடனுதவிகளும்,1 கோடி மதிப்பில் 105 உறுப்பினர்களுக்கு தாட்கோ கடனுதவிகளும்,ரூ.60 இலட்சம் மதிப்பில் 60 உறுப்பினர் களுக்கு மாற்று பாலினத்தவர் கடனுதவிகளும்,ரூ.30 இலட்சம் மதிப்பில் 10 உறுப்பினர்களுக்கு மினி மூன்று சக்கர வாகனத்திற்கான கடனுதவிகளும்,ரூ.2 கோடி மதிப்பில் 350 உறுப்பினர்களுக்கு சிறுவணிக கடனுதவிகளும்,ரூ.50 இலட்சம் மதிப்பில் 112 உறுப்பினர்களுக்கு பெண்கள் தொழில் முனைவோர் கடனுதவிகளும்,ரூ.50 இலட்சம் மதிப்பில் 155 உறுப்பினர்களுக்கு நாட்டுப்புற கலைஞர்கள் கடனுதவிகளும்,ரூ.2.50 கோடி மதிப்பில் 286 உறுப்பினர்களுக்கு மத்திய காலக்கடனுதவிகளும்,ரூ.20 இலட்சம் மதிப்பில் 45 பயனாளி களுக்கு விதவை மற்றும் கைம்பெண்கள் கடனுதவிகளும், ரூ.10 இலட்சம் மதிப்பில் 10 உறுப்பினர்களுக்கு முத்ரா கடனுதவிகளும்,ரூ.1.50 கோடி மதிப்பில் 165 உறுப்பினர்களுக்கு சிறு குறு தொழில் கடனுதவிகளும், ரூ.50 இலட்சம் மதிப்பில் 55 பயனாளிகளுக்கு கலைஞர் கைவினைத்திட்டம் கடனுதவிகளும், ரூ.25 இலட்சம் மதிப்பில் 52 உறுப்பினர்களுக்கு கலைஞர் கனவு இல்லம் கடனுதவிகளும்.ரூ.50 இலட்சம் மதிப்பில் 56 பயனாளி களுக்கு மாற்றுத்திறனாளி கடனுதவிகளும்,ரூ.1 கோடி மதிப்பில் 22 பயனாளிகளுக்கு வீடு கட்டும் கடனுதவிகளும்,ரூ.1.50 கோடி மதிப்பில் 25 உறுப்பினர்களுக்கு வீடு அடமானக்கடனுதவிகள் என மொத்தம் ரூபாய்.107.71 கோடி மதிப்பில் 12,170 உறுப்பினர்களுக்கு பல்வேறு கடனுதவிகளை வழங்கினார்கள்.

தொடர்ந்து,சிறந்த கூட்டுறவு கீதத்தை எழுதிய ஆனந்த் செல்வன் அவர்களுக்கு ரூ.50 ஆயிரத்திற்கான பரிசுத்தொகை மற்றும் சிறப்பு கேடயத்தினையும்,மாநில அளவிலான சிறப்பாக செயல்பட்ட 74 கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்களையும் வழங்கி, பாராட்டினார்கள்.

மேலும் கூட்டுறவுத் துறையில் பணியிலிருக்கும்போது இறந்த பணியாளரின் குடும்ப வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை 1 நபருக்கும் ம சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் வழங்கினர் .

---

### திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

# பூண்டி மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

திருவள்ளூர் மேற்கு மாவட்டம், பூண்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் கிறிஸ்டி (எ) அன்பரசு அவர்களுக்குப் பதிலாக **தா.மோதிலால்** (18, நெய்வேலி கிராமம் & அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம் 602 023) அவர்கள் பூண்டி மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் : 22.11.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

---



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், எம்.குமாரசக்கனாபுரம் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.19.39லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைப்பதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் இமானுவேல், சின்னமாரிமுத்து, அன்புராஜன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.